**அரச மரக் கூட்டுத்தாபனம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அரச மரக் கூட்டுத்தாபனத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் காரணமாக கூட்டுத்தாபனத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கூட்டுத்தாபனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கூட்டுத்தாபனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களின் தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 32 ஆவது பிரிவின் பிரகாரம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஈடுசெய்ய முடியாதிருந்த போதிலும், அதற்கு முரணாக மீளாய்வாண்டில் முழுமையாக தோன்றி எடுக்கப்பட்டிருந்த சகல வன பயிர்ச் செய்கைகளுக்கும் உரிய, வன பாதுகாப்பு திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய உரித்துப்பங்கு ரூபா 1,143,231,084 தொகை, பழைய தேக்க வேர்கள் மற்றும் புதிய தேக்க வேர்கள் தோன்றி எடுப்பதற்காக பெற வேண்டிய ரூபா 53,384,642 தொகைக்கு ஈடுசெய்யப்பட்டிருந்தது. | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் 33 ஆவது பந்தியின் பிரகாரம் எங்களால் சகல சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவினங்கள் தனித்தனியாக வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன், ஒரு செலவின தலைப்பிற்குரிய செலுத்த வேண்டிய பெறுமதிக்கு எதிராக பெறவேண்டிய பெறுமதி சீராக்கத்தின் மூலம் கொடுக்கல் வாங்கல்களில் காணப்படுகின்ற வரவிற்கோ அல்லது நிதிக்கூற்றுக்களை பரிசீலனை செய்பவர்கள் புரிந்துகொள்வதற்கு இடையூறு ஏற்படாத வகையில் இருந்ததுடன், அதன் மூலம் ஏற்படுகின்ற கணக்கீட்டு தாக்கங்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு வருடமும் வன பாதுகாப்பு திணைக்களத்தினால் அவர்களுக்கு செலுத்த வேண்டிய உரித்துப்பங்கு தொகை கணப்பீடு செய்யப்பட்டு எங்களுக்கு வழங்கப்படுவது பின்வரும் முறையிலாகும். அதன் பிரகாரம் எங்களின் சராசரியான விற்பனைப் பெறுமதியில் மர வேர்களுடன் கழற்றி டிப்போவிற்கு போக்குவரத்து செய்யப்படுகின்ற சகல செலவினங்களும் மற்றும் இலாப விகிதமும் குறைக்கப்பட்டு வருகின்ற வேறுபாடு வன பாதுகாப்பு திணைக்களத்தினால் செலுத்த வேண்டிய உரித்துப்பங்கு தொகையாக எங்களுக்கு வழங்கப்படுகின்றது. எனினும், 2020 ஆம் ஆண்டில் வன பாதுகாப்பு திணைக்களத்தினால் | நியமத்தின் பிரகாரம் சரியாக கணக்குகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | உரித்துப்பங்கு கணிப்பீடு செய்யும் போது குறைக்கப்பட வேண்டிய வேர் கழற்றல் மற்றும் வெளியேற்றும் செலவினங்கள் இன்னும் கணிப்பீடு செய்ய முடியாதிருந்தமையினால் மேற்கூறப்பட்ட செலவினங்களின் பின்னர் அறிவித்து அனுப்பப்படுகின்றமையை வெளியிடப்பட்டு உரித்துப்பங்கு தொகை எங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. அதன் பிரகாரம் எங்களினால் உற்பத்திக்கு பங்களிக்கின்ற சகல செலவினங்களும் இனங்காண வேண்டியதாக இருந்தமையால் அதற்கான செலவின மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு அது உரித்துப்பங்கு பெறுமதிக்கு சரியாக சீராக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதற்கு முன்னைய ஆண்டுகளில் அவர்களினால் இந்த செலவினங்களில் மதிப்பீடு செய்யப்பட்டு ஒரே தடவையில் உரித்துப்பங்கு தொகையில் கழிக்கப்பட்டு எங்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தமையையும் குறிப்பிடுகின்றோம். | |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் 42(ஆ) பிரிவின் பிரகாரம் முன்னைய ஆண்டு தவறுகளை சரிசெய்யும் போது முன்னைய ஆண்டின் சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் உரித்துக்கள் கணக்குகளின் ஆரம்ப மீதியில் மீண்டும் ஸ்தாபித்தல் (restating) மேற்கொள்ள வேண்டியிருந்த போதும் அதற்கு முரணாக 2019 ஆம் ஆண்டிற்குரிய பெறவேண்டிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 12,585,673 தொகை | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் மூலம் கணக்கீட்டு கொள்கை, கணக்கீட்டு மதிப்பீட்டு மாற்றங்கள் மற்றும் தவறுகள் தொடர்பாக காண்பிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டில் ஏற்பட்ட தவறுகள் பொருண்மை எண்ணக்கருவின் பிரகாரம் பொருண்மை அல்லாத சந்தர்ப்பங்களின் போது மீளாய்வாண்டில் சீராக்கங்கள் மேற்கொள்வதற்கு முடியுமாக இருந்தமை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதி வருமானமாக சீராக்கப்பட்டு நிலையான வைப்பு வட்டி | இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அட்டுறு செலவினம் அதிகரித்து ஒதுக்குதல் ரூபா 173,514 மற்றும் அட்டுறு செலவினம் குறைவாக காண்பிக்கப்பட்டமை ரூபா 125,971 தொகை தொடர்பாக நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வருமானம் வரிக்கு முன்னரான இலாபத்தில் சிறிய சதவீதத்தைக் கொண்டிருந்தமையினால் இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் பிரகாரம் மீளாய்வாண்டில் சீராக்கங்கள் மேற்கொள்ள முடியும். | |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 37 இன் 28 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் நிகழத்தக்க பொறுப்புக்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும், ரூபா 5,328,908 தொகையான இழப்பீடு கோரி கூட்டுத்தாபனத்திற்கு எதிராக தொடரப்பட்ட 05 வழக்குகள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், ரூபா 294,000 தொகையான நிகழத்தக்க சொத்துக்களுக்கு உரிய இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 37 இன் 34 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 37 இன் கீழ் நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் நிகழத்தக்க சொத்துக்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன், உங்களினால் குறிப்பிடுப்பட்டுள்ள நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் சொத்துக்கள் எதிர் காலத்தில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | நியமத்தின் 16 இன் 51 வது பிரிவின் பிரகாரம் சொத்தொன்று இழிவு பெறுமதியின் பயன்பாட்டு ஆயட் காலம் ஆகக் குறைந்தது ஒவ்வொறு நிதியாண்டின் போதும் மீளாய்வு செய்யப்பட வேண்டும். எனினும் பயன்படுத்தக் கூடிய1 ஆயட் காலம் வருடாந்தம் | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான சொத்துக்களில் 2019 ஆம் ஆண்டில் வாகனங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் காணிகள் மற்றும் கட்டிடங்களை மீள்மதிப்பீடு செய்வதற்காக அரசாங்க மதிப்பீட்டு திணைக்களத்திற்கு தொடர்ச்சியாக கோரிக்கை விடப்பட்ட போதிலும், | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சொத்துக்களை மதிப்பீடு செய்து நாளதுவரையாக்கி கணக்குகள் தயாரக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வு செய்வதற்கு தவறியமையின் காரணமாக தொடர்ந்தும் பாவணையில் உள்ள முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டுள்ள ரூபா 775,293,479 கிரயமான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பன மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அவர்களினால் இது வரை அதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இயந்திர பொறிமுறைகள் மற்றும் துணைப்பாகங்களை மீள்மதிப்பீடு செய்வதற்காக 2020 ஆம் ஆண்டில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதிலும், Covid - 19 தொற்றுநோய் நிலைமையின் இடையே அதனை மேற்கொள்வதற்கும் முடியாதிருந்தது . 2021 ஆம் ஆண்டில் இந்த சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (உ) | 1968 ஆம் ஆண்டு முதல் கூட்டுத்தபானம் கையேற்ற ரூபா 59,059,164 தொகையான காணிகளின் வரலாற்று கிரயத்தின் கீழ் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் அறிக்கையிடப்பட்ட போதும் 50 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக காணப்படுகின்ற இந்த காணி தற்போதைய சந்தைப் பெறுமதியில் மீள் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காணிகளை மீள்மதிப்பீடு செய்வதற்காக அரசாங்க மதிப்பீட்டு திணைக்களத்திற்கு தொடர்ச்சியாக கோரிக்கை விடப்பட்ட போதிலும். இது வரை அவர்களினால் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணிகளின் பெறுமதியை மதிப்பீடு செய்து நாளதுவரையாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | இலங்கை கணக்கிட்டு நியம இலக்கம் 02 இன் பிரகாரம் இறுதி இருப்பு, கிரயம் அல்லது தேறிய தேறக்கூடிய பெறுமதி இந்த இரண்டில் குறைவாக பெறுமதிக்கு பெறுமதியிடப்பட வேண்டியிருந்ததுடன், இறுதியிருப்பின் கிரயத்தினை விட தேறிய தேறக்கூடிய பெறுமதி குறைவாக வருமிடத்து அந்த வேறுபாடு செலவினமாக இலாபத்தில் | அரச மரக் கூட்டுத்தாபனத்தின் கொள்கையாக ஒவ்வொரு கணக்காண்டின் திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியில் உள்ளவாறு சொந்தமான வியாபார இருப்புக்களுக்காக (மர தளபாடங்கள் தவிர) 15 சதவீதம் இருப்பு அழிவடைந்து செல்வதற்கான ஒதுக்கீடு மேற்கொள்ளப்படுகின்றது. வன பாதுகாப்பு திணைக்களத்தின் வருடாந்த வன முகாமைத்துவ திட்டத்தின் பிரகாரம் அரச மரக் கூட்டுத்தபானத்திற்கு விடுவிக்கப்படுகின்ற வன பயிர்ச் | நியமத்தின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் இருப்புக்கள் சீராக்கப்பட வேண்டும். |

இருந்து பதிவழிக்க வேண்டியிருந்த போதிலும், மேற்கூறப்பட்ட நியமத்திற்கு முரணாக கூட்டுத்தபானத்தினால் வியாபார இருப்புக்களுக்காக இருப்பு சேதத்திற்காக 15 சதவீதம் அதாவது ரூபா 244,674,912 தொகையான ஒதுக்கமொன்று இறுதி இருப்பில் இருந்து கழிக்கப்பட்டு நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே இருப்பு மிகை ஒதுக்கீடாக ரூபா 44,165,123 தொகை மற்றும் இருப்பு பற்றாக்குறை ஒதுக்கமாக ரூபா 54,329,480 தொகை இலாபத்தில் சீராக்கப்பட்டு தேறிய பெறுமதி ரூபா 10,164,357 இனால் இலபாம் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

செய்கை அளவின் பிரகாரம் வருட இறுதி இருப்பின் அளவு தீர்மானிக்கப்படுகின்றது. வருடாந்த இருப்பு அழிவடைந்து செல்லும் சகல அலகுகளுக்காகவும் தனித்தனியாக கணிப்பீடு செய்யப்படுவதுடன், தனித்தனியாக இருப்பு மிகை ஒதுக்கீடுகள் மற்றும் பற்றாக்குறை ஒதுக்கீடுகள் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்றது. கூட்டுத்தபானத்தின் சகல பிரதேசங்களிலு:ம் இலாப நட்டங்கள் தனித்தனியாக கணப்பீடு செய்யப்படுகின்றமையினால் இருப்பு மிகை ஒதுக்கீடுகள் செலவினங்களில் பதிவழிப்பதற்கு முடியாதிருந்தமையினால் அந்த செலவினங்கள் விற்பனை மற்றும் விநியோகச் செலவினங்களின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளதுடன், மிகை ஒதுக்கீடுகள் செயற்பாட்டு வருமானத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2020 இன் நிதியாண்டின் இருப்பு மிகை ஒதுக்கீடாக ரூபா 44,165,123 தொகையும், பற்றாக்குறை ஒதுக்கீடாக ரூபா 54,329,480 தொகையும் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2020 ஆம் ஆண்டில் வியாபார கடன்பட்டோர் ரூபா 443 மில்லியன் குறைவடைந்திருந்தது. இலங்கை புகையிரத திணைக்களத்தில் இருந்து நீண்ட காலமாக கிடைக்க வேண்டிய கடன் தொகையில் ரூபா 609 மில்லியன் தீர்க்கப்பட்டுள்ளது. வருடாந்த ஐயக் கடன் ஒதுக்கீடுகள் சகல அலகுகளுக்காகவும் தனித்தனியாக கணிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன், தனித்தனியாக ஐயக் கடன் மிகை ஒதுக்கீடுகள் மற்றும் பற்றாக்குறை ஒதுக்கீடுகள் நிதிக் கூற்றுக்களில்

காண்பிக்கப்படுகின்றது. கூட்டுத்தாபனத்தின் சகல பிரதேசங்களினதும் இலாப நட்டங்கள் தனித்தனியாக கணப்பீடு செய்யப்படுகின்றமையினால் ஐயக் கடன் மிகை ஒதுக்கீடுகள் செலவினங்களில் பதிவழிப்பதற்கு முடியாதிருந்தமையினால் அந்த செலவினங்கள் விற்பனை மற்றும் விநியோக செலவினங்களின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளதுடன், மிகை ஒதக்கீடுகள் செயற்பாட்டு வருமானத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2020 இன் நிதியாண்டில் ஐயக் கடன் மிகை ஒதுக்கீடாக ரூபா 99,816,708 தொகையும் பற்றாக்குறை ஒதுக்கீடாக ரூபா 728,740 தொகையும் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மொத்த குத்தகை தவணை செலுத்துதல். காசுப் பாய்ச்சல் கூற்றில் காசு வெளிப்பாய்ச்சலாக ரூபா 8,564,544 தொகை காண்பிக்க வேண்டியிருந்த போதிலும், அது காசு உட்பாய்ச்சலாக ரூபா 12,150,297 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது, | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களுக்குரிய நிதி குத்தகை வசதிகள் காசு உட்பாய்ச்சலாக காசுப் பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டமை மற்றும் செயற்பாட்டு குத்தகையின் கீழ் பெறப்பட்ட 03 வாகனங்களுகுரிய காசு வெளிப்பாய்ச்சலாக நிதி செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டமை எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். இதனால் காசு மற்றும் காசுக்குச் சமனான சொத்துக்களின் தேறிய பெறுமதி குறைவடைந்தமைக்காக தாக்கமளித்திருக்கவில்லை. | தகவல்களை சரியாக சீராக்கி நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிறுத்தி வைத்தல் உழைப்புக்களில் ஊழியர் கடன் சுழற்சி நிதியத்திற்கு செய்யப்பட்ட ரூபா 13,570,520 தொகையான மாற்றல்களில் காசு வெளிப்பாய்ச்சல் அல்லது உட்பாய்ச்சல் காணப்படாதிருந்த போதிலும், அது காசு உட்பாய்ச்சலாக காசுப் பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஊழியர் கடன் சுழற்சி நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காசு வெளிப்பாய்ச்சலாகவும், முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காசு உட்பாய்ச்சலாகவும் குறிப்பிடப்பட்டமையினால் காசு மற்றும் காசுக்குச் சமமான சொத்துக்களின் தேறிய பெறுமதி குறைவடைந்தமை தொடர்பில் தாக்கம் ஏற்பட்டிருக்கவில்லை. இதனை எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தகவல்களை சரியாக சீராக்கி நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | பணிக்கொடை செலுத்துகைகள் ரூபா 71,813,395 தொகை காசு வெளிப்பாய்ச்சலாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், ஆரம்ப மற்றும் இறுதி மீதிகளுக்கு இடையிலான வேறுபாடான ரூபா 42,882,621 தொகை காசுப் பாய்ச்சல் கூற்றில் காசு உட்பாய்ச்சலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் பணிக்கொடை ஒதுக்கீடுகளின் பெறுமதிகளின் வேறுபாடு செயற்பாட்டு செலவினங்களின் கீழ் காசு உட்பாய்ச்சலாக காண்பிக்கப்பட்டிருந்தமை எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதனால் காசு மற்றும் காசுக்குச் சமனான சொத்துக்களின் தேறிய பெறுமதி குறைவடைந்தமைக்காக தாக்கமளித்திருக்கவில்லை. | தகவல்களை சரியாக சீராக்கி நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டிற்காக ரூபா 151,863,773 தொகையான ஊழியர் கடன் வழங்கப்பட்டிருந்ததுடன், ரூபா 122,712,917 தொகையான ஊழியர் கடன் மீள அறவிடப்பட்டிருந்தது. அது காசு வெளிப்பாய்ச்சல் மற்றும் உட்பாய்ச்சல் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காசுப் பாய்ச்சல் கூற்றில் சீராக்கப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டில் ஊழியர் கடன் வழங்குதல் மற்றும் அறவிடல்கள் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காசுப் பாய்ச்சல் கூற்றில் சீராக்கப்பட்டுள்ளது. இது எதிர்காலத்தில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தகவல்களை சரியாக சீராக்கி நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | ஏனைய வட்டி வருமானம் ஆன ரூபா 17,855,947 தொகை முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காசு உட்பாய்ச்சலாக இருந்த போதிலும், அது முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காசு வெளிப்பாய்ச்சலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏனைய வட்டி வருமானங்கள் செயற்பாட்டு வருமானத்தின் கீழ் காசு உட்பாய்யச்சலாக காசுப் பாய்ச்சல் கூற்றில் சீராக்கப்பட்டுள்ளது. முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் சீராக்கப்பட்டுள்ளது. அப்பெறுமதி செயற்பாடல்லாத வருமானத்தில் உள்ளக்கப்பட்டுள்ளமையினால் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காசு வெளிப்பாய்ச்சலாக சீராக்கப்பட்டுள்ளது. | தகவல்களை சரியாக சீராக்கி நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | காணிகளை நிரப்பும் செலவினமான ரூபா 509,250 தொகை காணியாக கணக்கீடு செய்யப்படாமல் காணி அபிவிருத்தி செய்தலாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | ரூபா 509,250 தொகையான காணி நிரப்புதல்களுக்காக செலவு ஏற்பட்ட செலவினங்கள் காணி அபிவிருத்தியின் கீழ் சரியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | தகவல்களை சரியாக சீராக்கி நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | வரி அறவிட வேண்டிய வருமானத்தில் (Texable Income) உள்ளடக்கப்பட்ட வட்டி வருமானம் ரூபா 174,077,703 ஆக இருந்த போதிலும், அதில் ரூபா 12,585,673 தொகை முன்னைய ஆண்டிற்குரிய வட்டி வருமானமாக இருந்தமையால் அதன் அடிப்படையிலும் வருமான வரி கணக்கீடு செய்யப்பட்டமையினால் மீளாய்வாண்டில் வருமான வரி ரூபா 3,020,561 இனால் மிகை கணப்பீடு செய்யப்பட்டிருந்தது. | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் மூலம் கணக்கீட்டு கொள்கை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் வேறுபாடுகள் மற்றும் பிழைகள் தொடர்பாக காண்பிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டில் இடம் பெற்ற தவறுகள் பொருண்மை எண்ணக்கருவின் பிரகாரம் போதியளவாக இல்லாதிருந்த சந்தர்ப்பங்களின் போது மீளாய்வாண்டில் சீராக்கங்களை மேற்கொள்வதற்கு முடியுமாக இருந்தமை நியமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டின் வட்டி வருமானம் முன்னைய ஆண்டில் சீராக்கப்பட்டுள்ளதுடன், அதற்குரிய வருமான வரி மீளாய்வாண்டின் வருமான வரியாக கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அது மிகைக் கணிப்பீடு இல்லை. | தகவல்களை சரியாக சீராக்கி நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | வரி அறவிட வேண்டிய வருமானத்தில் உள்ளடக்கப்பட்ட வாடகை வருமானம் ரூபா 11,253,478 ஆக இருந்த போதிலும், அதில் ரூபா 10,641,150 தொகை வன பாதுகாப்பு திணைக்களத்தில் இருந்து கிடைக்க வேண்டியதா என சரியாக உறுதிப்படுத்தப்படாத வாடகை வருமானம் ஆகும். அதனால் அதன் அடிப்படையிலும் வருமான வரி கணிப்பீடு செய்யப்பட்டமையினால் மீளாய்வாண்டின் வருமான வரியும் ரூபா 2,553,876 இனால் மிகைக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் முதலாவது செயல்முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தின் போது எங்களால் நிலுவை கட்டிட வாடகை தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன், அதன் போது வன பாதுகாப்பு திணைக்களத்திற்கு அந்த நிலுவை கட்டிட வாடகைத் தொகையை வருடாந்த பாதீட்டின் மூலம் ஒதுக்கி அரச மரக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. பிரதான அலுவலக கட்டிடத்தின் மொத்த பராமரிப்பு செலவினமும் கூட்டுத்தாபனத்தினால் செய்வதற்கு ஏற்பட்டமையினால் அந்த செலவினங்களில் ஒரு பகுதியை தீர்க்கும் நோக்கில் வாடகையாக பெயரளவு பெறுமதியில் வன பாதுகாப்பு திணைக்களத்தில் இருந்து அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அந்த பெயரளவுப் பெறுமதி சந்தைப் பெறுமதியை விட மிகவும் குறைவான பெறுமதியைக் கொண்டிருந்தது. கட்டிடத்திற்காக மின்சாரம் மற்றும் நீர் வழங்குதல் பொது மீற்றர் மானியை பயன்படுத்தி வழங்கப்பட்டமையினால் இந்த சொத்துக்கள் முதலீட்டு ஆதனமாக இனங்காணும் குறிகாட்டிகளின் மூலம் முடியாதிருந்தது. இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 40 இன் 16(B) பந்தியின் பிரகாரம் மேற்கூறப்பட்ட வாடகை ஆதனத்தின் கிரயம் அல்லது நியாயமான பெறுமதி சரியாக பெறுமதியிட முடியாதிருந்தது. வாடகைப் பெறுமதியும் பெயரளவு பெறுமதியாக மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. இந்த காரணங்களினால் மேலே காண்பிக்கப்பட்ட கட்டிடம் முதலீட்டு ஆதனமாக இனங்காண முடியாதிருந்தது. | கட்டிட வாடகை தொடர்பாக இணக்கப்பாடொன்று காணப்படவில்லை. இதுவரை உடன்படிக்கை செய்யப்பட்ட கடப்பாடொன்று காணப்படாதிருந்தமையினால் வருமானங்களை கணிப்பிடுதல் மற்றும் கணக்கீடு செய்தல் என்பவற்றை சரியாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அதன் பிரகாரம் வாடகை அறவிட வேண்டிய வருமானத்தில் உள்ளடக்கப்பட்ட வன பாதுகாப்பு திணைக்களத்தில் இருந்து கிடைக்க வேண்டிய கட்டிட வாடகையின் அடிப்படையில் வருமான வரி கணிப்பிடல் சரியாக இருந்ததுடன், மிகை கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | |
| (ஐ) | வரி அறவிட வேண்டிய வருமானங்களை கணக்கீடு செய்யும் போது சந்தர்ப்பம் அளிக்கப்படாத செலவினங்களை உள்ளடக்கிய ஆண்டின் பணிக்கொடை செலவினம் ரூபா 68,605,260 ஆக இருந்த போதிலும், வருமானக் கூற்றில் உள்ளடக்கப்பட்ட வரிக்கு முன்னரான இலாப கணிப்பீட்டின் போது ஆண்டின் பணிக்கொடை செலவினம் ரூபா 85,897,251 ஆக இருந்தமையினால் சந்தர்ப்பம் அளிக்கப்படாத செலவினங்களுக்காக ஆண்டின் பணிக்கொடைகள் ரூபா 17,291,991 தொகை குறைவாக சீராக்கப்பட்டிருந்தது. சந்தர்ப்பம் அளிக்கப்பட்ட செலவினங்களை உள்ளடக்கிய பணிக்கொடை கொடுப்பனவுகள் ரூபா 58,921,069 ஆக இருந்த போதிலும், நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பணிக்கொடை கொடுப்பனவுகள் ரூபா 71,813,398 ஆக | 2021/2020 மதிப்பீட்டு ஆண்டிற்குரிய வருமான வரி கணிப்பீடு செய்யப்பட்டு 2021 செப்டம்பர் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் செலுத்த வேண்டியிருந்ததுடன், அந்த காலப் பகுதியில் எங்களால் மீண்டும் வரி கணிப்பீடு செய்து தற்போது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள வரிகளும் பரீட்சிக்கப்பட்டு பற்றாக்குறை அல்லது மிகை கணிப்பீடொன்று ஏற்பட்டிருக்குமாயின் அதனை சரியாக சீராக்கி இறுதி வரி கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாறு மேற்கொள்ளப்படுகின்ற இறுதி வரி கொடுப்பனவுகளின் போது எங்களின் நிதிக் கூற்றுக்களில் வெளியிடப்பட்ட வரி கணிப்பிடல்களில் பற்றாக்குறை அல்லது மிகை ஒதுக்கீடுகள் இடம் பெற்றிருக்குமாயின் அதனை எதிர்வரும் ஆண்டின் வருமான வரி செலுத்துகைகளுடன் சீராக்கி திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என தயவுடன் அறியத்தருகின்றோம். | குறித்த கணக்காண்டிற்குரிய சரியான தகவல்களை உள்ளடக்கி நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இருந்தமையினால் சந்தர்ப்பம் அளிக்கப்பட்ட செலவினங்களை உள்ளடக்கிய பணிக்கொடை கொடுப்பனவுகள் ரூபா 12,892,329 தொகை குறைவாக சீராக்கப்பட்டிருந்தது. இவ்வாறே வருமான வரி கணிப்பிடும் போது பணிக்கொடை சீராக்கங்கள் வேறுபட்டிருந்தமையினால் ஆண்டின் வருமான வரியும் ரூபா 1,055,918 இனால் குறைவாக மதிப்பீடொன்று செய்யப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | | |
| (ஒ) | கந்துருவெல மரக் களஞ்சியத்தில் காணப்படுகின்ற வன குற்ற மரங்கள் தொடர்பாக இறுதியான 14 வழக்குகளுக்குரிய ரூபா 2,064,022 தொகையான இருப்புக்கள் 2020 திசெமபர் 31 ஆம் திகதி இறுதி இருப்பிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் 2020 ஆம் ஆண்டின் இருப்பு அந்த பெறுமதியால் குறைத்து கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | 14 வழக்குகளுக்குரிய மரங்கள் விடுவித்தல்களில் கிழிக்கப்பட்ட மரங்கள் குறித்துரைத்த விதத்தில் இருப்பு புத்தகங்களுக்கு கொண்டுவரப்பட்டிருந்ததுடன், அவை இருப்பு மெய்மெய்யாய்வு சபைக்காவும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனினும், அந்த வழக்குகளுக்கு இடையே விடுவிக்கப்பட்டுள்ள 124 குற்றிகள் குறித்துரைத்த பிரகாரம் இருப்பு புத்தகங்களுக்கு கொண்டுவரப்பட்டு மெய்மெய்யாய்வு சபைக்கு காண்பிப்பதற்கு இருப்புக்கு பொறுப்பான உத்தியோகத்தரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கு காரணமாக குற்றிகள் மீண்டும் இருப்பு புத்தகத்திற்கு கொண்டுவருவதற்கு முன் குற்றிகளை பரீட்சித்தல் உதவி பிரதேச முகாமையாளரின் அவதானிப்பின் கீழ் மேற்கொள்வதற்காக | குறித்த கணக்காண்டிற்குரிய சரியான தகவல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஏற்பட்டிருந்தமையின் காரணமாக குற்றி இருப்பு களஞ்சிய வளவில் வைக்கவேண்டியிருந்ததுடன்இது வரையில் களஞ்சிய வளவில் குற்றிகளின் இருப்பொன்று வைக்கப்பட்டிருந்தமையால் களஞ்சிய வளவில் இட அளவு காணாதிருந்ததுடன் காணப்படுகின்ற கொவிட் தொற்றுநோயின் காரணமாக களஞ்சியத்தை தொடர்ந்து மூட வேண்டி ஏற்பட்டிருந்தது. இந்த நிலைமையை உடனடியாக சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | |
| (ஓ) | பொலன்னறுவை பிரதேச அலுவலகத்தில் 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான பரீட்சை மீதியின் பிரகாரம் நானாவித கடன்கொடுத்தோர் பெறுமதி ரூபா 14,318,305 ஆக இருந்த போதிலும், 2021 இன் உடன்படிக்கை செய்யப்பட்ட உடன்படிக்கை செய்யப்பட்ட ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்ட ரூபா 3,786,125 தொகையான முற்பண தொகையின் பெறுமதியும் அதில் உள்ளடக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக நானாவித கடன்கொடுத்தோர் பெறுமதி ரூபா 3,786,125 தொகை அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்ட ரூபா 3,786,125 தொகையில் ரூபா 9,155 தொகை தவிர மிகுதி தொகை 2020 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட மர வழங்கல்களின் போது அகற்றப்பட்ட தேக்க வேர்கள் மற்றும் பழைய தேக்க வேர்களை தோன்றியெடுப்பதற்கான நடவடிக்கைகளின் செலவினங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கமாகும். | சரியாக கடன்கொடுத்தோர் மீதியை காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஔ) | கூட்டுத்தாபனத்தில் காசு விற்பனைக்கான முற்பண மீதி (cash sales advance) ரூபா 136,839,184 ஆக இருந்த போதிலும், 03 மாதங்களை விஞ்சிய | 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ஒவ்வொரு பிரதேசங்களுக்கும் உரிய காசு விற்பனை முற்பண மீதி மூலம் ஏல விற்பனைகளில் இருந்து | ஆண்டிற்குரிய கொடுக்கல் வாங்கல்களை மாத்திரம் சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட |

| | | |
|---|---|---|
| ஏலவிற்பனைகளில் கிடைத்த முற்பணம் இனங்காணப்பட்டு மீளாய்வாண்டின் வருமானத்திற்கு எடுப்பதற்கு கூட்டுத்தபானம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அவ்வாறே அந்த முற்பண மீதிக்காக பிரதேச அலுவலகங்களில் பட்டோலைகள் தயாரிக்கப்படாதிருந்தமை யினால் முற்பண கணக்கின் மீதிகள் உள்ளபடியாக காணப்பட்டதா என கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | வாடிக்கையாளர்களினால் 25 சதவீத முற்பணம் செலுத்தி உள்ளமை காண்பிக்கப்பட்ட போதும் அதற்குரிய இருப்பை அகற்றுதல் அடுத்து வரும் ஆண்டில் முதல் மாதத்தில் மேற்கொள்ளப்படுவதன் காரணமாக கணக்குகளில் தீர்க்கப்படாத மீதியாக காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே ஆண்டின் இறுதிக் கணக்குகளுக்குரிய ஒவ்வொரு பிரதேசங்களினதும் விற்பனை பிரிவினால் வைப்புச் செய்யப்படுகின்ற நடைமுறைக் கணக்கு வைப்புக்களை பயன்படுத்தி தயாரிக்கப்படுகின்ற வங்கி இணக்கக்கூற்று அறிக்கை தயாரிக்கப்பட்டதன் பின்னர் இறுதி கணக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். அந்த பணிகளுக்கு முன்னுரிமை வழங்கி நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், அடுத்து வரும் ஆண்டின் முதல் மாதத்தில் முன்னைய ஆண்டின் இறுதி மாதத்தின் முற்பணம் உரிய பட்டியல்களில் இருந்து தீர்த்து வைக்கப்படுகின்றது. | வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

---

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் 14(1) ஆம் பிரிவு. | கணக்குகளுடன் வரைவு ஆண்டறிக்கையின் பிரதியொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு | இந்த அறிக்கையை விரைவாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய சட்டங்கள், விதிகள், பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 110 | கூட்டுத்தபானத்தினால் இழப்புக்கள் தொடர்பான பதிவேடொன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக உரிய பிரிவுகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், 2021 ஆம் ஆண்டு முதல் இழப்பு பதிவேட்டை பேணிச் செல்வதற்காக ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | உரிய சட்டங்கள், விதிகள், பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2015 மே 25 ஆம் திகதிய PED2015/1 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | உத்தியோகபூர்வ வாகனம் உரித்தான உத்தியோகத்தரின் மாதாந்த எரிபொருள் படி போதியளவாக இல்லாத விஷேட சந்தர்ப்பங்களின் போது பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட உள்ளபடியான எரிபொருள் செலவினங்களை மீளளிப்பு செய்வதற்காக ஆலோசனை வழங்கப்பட்ட போதிலும், கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளர் தவிர ஏனைய உத்தியோகத்தர்களின் மேலதிக எரிபொருள் செலவினம் ரூபா 973,350 தொகை தலைவரின் அங்கீகாரத்துடன் மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தது. | பொது திறைசேரியின் சுற்றறிக்கை இலக்கம் PED2015/1 இன் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் உத்தியோகபூர்வ வாகனங்கள் உரித்தான சகல உத்தியோகத்தர்களுக்காகவும் மேலதிக எரிபொருள் பணச் செலவினங்கள் ஒவ்வொரு மாதமும் பணிப்பாளர் சபைக்கு அனுப்பப்பட்டு அங்கீகாரத்துடன் உரிய பிரகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் தலைவர், செயற்பாட்டு பணிப்பாளர், பொது முகாமையாளரை உள்ளக்கிய பிரதி மற்றும் உதவி பொது முகாமையாளர்களின் மேலதிக எரிபொருளுக்காக சரியான பிரகாரம் மாதாந்த பணிப்பாளர் சபை அங்கீகாரத்தை பெற்றிருந்தமையை குறிப்பிடுகின்றோம். | உரிய சட்டங்கள், விதிகள், பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2020 ஒக்டோபர் 26 ஆம் திகதிய 2020/02 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில் உள்ளடக்கப்படாத பதவியொன்றான பணிப்பாளர் சபையின் செயலாளர் பதவிக்காக வெளி நபரொருவர் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் பிரகாரம் கடமை கையளித்தல் அடிப்படையில் சேர்க்கப்பட்டு 2020 ஆம் ஆண்டிற்காக ரூபா 337,000 தொகை ‘‘மதியுரை சேவை மற்றும் விஷேட கொடுப்பனவுகள்’’ இன் கீழ் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்து. ஆட்சேர்ப்பிற்கான அடிப்படையாக கொள்ளப்பட்ட தகைமைகள் அல்லது ஆட்சேர்ப்பு நடைமுறை காணப்படவில்லை. | பணிப்பாளர் சபையின் செயலாளர் பதவி அரச மரக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையினால் 06 மாத காலத்திற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன், மேலும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் காலம் நீடிக்கப்பட்டு சேவை பெறப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் அங்கீகாரிக்கப்பட்ட முறைமையில் பதவிகளுக்கு சேர்த்துக் கொள்ளல் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (உ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 13 ஆவது பிரிவு. | விழா முற்பணம் வழங்கப்பட்டு ஒரு வருடத்திற்குள் அறவிட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் ஒரு வருடத்தை விட மேற்பட்ட காலம் முதல் நிலுவையாக காணப்படுகின்ற ரூபா 125,300 தொகையை அறவிடுவதற்கு | கூட்டுத்தாபன நிரந்தர மற்றும் அமைய ஊழியர்களுக்காக விழா முற்பணமாக ரூபா 10,000 தொகையொன்று வழங்கப்பட்டுள்ளதுடன், இந்த கொடுப்பனவுகளுக்காக அமைய ஊழியர்களுக்கு நிரந்தர ஊழியர்களின் பிணை பெறப்பட்டிருந்தது. எனினும், வேலை நீக்கம்/சேவையை | ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்ட விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | விட்டுச் சென்றமை போன்றவற்றிக்கு உட்பட்ட ஊழியர்களில் எந்தவொரு மீதி அறவிட வேண்டியிருந்ததுடன், அதற்குரிய ஒழுக்காற்று நடவடிக்கைகள் பூர்த்தியடைந்ததன் பின்னர் இந்த பணத்தை அறவிடும் இயலுமை காணப்படுகின்றது. | |
| (ஊ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவையின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்கள் தவிர சபையின் அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்காத வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை. | கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கு இடையே விவசாய உற்பத்திகள், பிரம்பு ஏற்றுமதி செய்தல் போன்ற நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு கூட்டுத்தபானம் நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன், எதிர்பார்த்த பிரகாரம் மரங்களின் உப பொருள் உற்பத்தி மற்றும் விற்பனையும் இடம் பெற்றிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது சிலிப்பர் மர ஏற்றுமதியும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மரம் சார்ந்த பூர்த்தி மற்றும் அரைப் பூர்த்தி பொருட்களை ஏற்றுமதி செய்தல் கூட்டுத்தபானத்தின் நோக்கமொன்றாக இருந்த போதிலும். அந்த | விவசாய ரீதியான மற்றும் பிரம்பு உற்பத்திற்காக இந்த நாட்டில் வேறொரு அரச நிறுவனம் செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றமையினால் அரச மரக் கூட்டுத்தாபனம் அந்த நோக்கங்களுக்காக பங்களிப்பொன்றை காண்பித்திருக்கவில்லை. தற்போது எங்களின் மரத் தளபாட பொருட் தொழிற்சாலைகளில் மரங்களின் உப பொருள் உற்பத்தி குறிப்பிடத்தக்க மட்டத்தில் மேற்கொள்ளப்படுவதுடன் கண்டி மற்றும் அம்பாறை பிரதேசங்களில் பல வர்ணங்களினால் ஆன மரப் பொருட்கள் (உதாரணம்: மணிக்கூடு, பூ வாளிகள், இராக்கை, வெட்டும் பலகை போன்ற விற்பனைகளின் மூலம் கவனத்தில் கொள்ளக் | ஏற்றுக் கொள்ளப்பட்ட சட்டங்கள் விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கூடிய வருமானம் ஒன்று உழைக்கப்பட்டிருந்தமையையும் குறிப்பிடுகின்றோம். மர சிலிப்பர் ஏற்றுமதி நடவடிக்கைகள் கடந்த ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட போதிலும், 2020 ஆம் ஆண்டில் உடன்படிக்கை செய்த நிறுவனத்துடன் ஏற்பட்ட சில பிரச்சினை நிலைமையின் அடிப்படையில் அதனை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்த போதிலும், 2021 ஆம் ஆண்டில் புதிய உடன்படிக்கையின் அடிப்படையில் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | |
| (எ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(ஏ) பிரிவு | பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவையின் பிரகாரம் கீழே குறிப்பிடப்படுகின்ற அவதானிப்புக்கள் தவிர கூட்டுத்தாபனத்தின் வளங்கள் செயற்திறனாகவும் ஆக்கபூர்வமானதாகவும் கால எல்லையில் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகைகளை பயன்படுத்தாதிருந்தமை. கல்தெமுல்ல கட்டிட தொகுதியில் நீர்த் தாங்கியை நிர்மாணிப்பதற்கா | இந்த ஒப்பந்தத்திற்காக 2020 சனவரி 08 ஆம் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. எனினும், இந்த நீர்த் தாங்கியை நிர்மாணிப்பதற்கு காணப்பட்ட உத்தேச இடம் மாற்றப்பட்டிருந்ததுடன், புதிய நிலத்தில் 02 மலசலகூடக் குழிகளை அகற்ற வேண்டி ஏற்பட்டிருந்தது. அந்த குழிகளை அகற்றி அவற்றை சரியான நிலைக்கு கொண்டுவரும் ஒப்பந்தத்தின் பெறுகை நடவடிக்கைகள் | ஏற்றுக் கொள்ளப்பட்ட சட்டங்கள் விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

க 2020 சனவரி 06 ஆம் திகதி ஒப்பந்தகாரர் ஒருவருடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன், உடன்படிக்கையின் பிரகாரம் 14 நாட்களுக்குள் ஆரம்பிக்கப்பட்டு 90 நாட்களில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. அந்த ஒப்பந்த காலத்தில் ஒப்பந்தத்தை ஆரம்பிப்பதற்கு ஒப்பந்தகாரர் தவறியிருந்ததுடன், 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் தாமதிக்கப்பட்டு 2020 யூலை 23 ஆம் திகதி வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் வேலை முற்பணமாக உடன்படிக்கை செய்யப்பட்ட தொகையில் 20 சதவீதம் அதாவது ரூபா 352,906 தொகை வழங்க வேண்டிய போதிலும், அதற்கு முரணாக 30 சதவீத தொகை அதாவது ரூபா 529,000 வழங்கப்பட்டிருந்தது. திட்டத்தின் பிரகாரம் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், ஒப்பந்தகாரர் 2020 ஒக்டோபர் 22 கல்தெமுல்ல இயந்திர பிரிவினால் மேற்கொள்ளப்பட்டதுடன், அந்த பெறுகை நடைமுறைகள் 2020 மார்ச் மாதம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. எனினும் அந்த காலத்தில் ஏற்பட்ட கொவிட் தொற்று நோய் நிலைமையின் இடையே $02^{1}/_{2}$ மாத காலம் நாடு மூடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஒப்பந்தகாரரினால் 2020 யூலை 23 ஆம் திகதி மீண்டும் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 30 சதவீத ஆகக்கூடியதன் கீழ் முற்பண தொகை வழங்க முடியும். அதன் பிரகாரம் ஒப்பந்தகாரரினால் வங்கி பிணையொன்று வழங்கி 30 சதவீத முற்பண தொகை பெறப்பட்டுள்ளது. எனினும், ஒப்பந்தகாரருடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை இது வரை காண்பிக்கப்படாதிருந்தமை தவறினால் ஏற்பட்டிருந்ததுடன், எதிர்காலத்தில் அந்த குறைபாடுகளை சரிசெய்யுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

ஆம் திகதி அளவில் வேலையை பூர்த்தி செய்வதற்கு இணங்கியிருந்த போதிலும், அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2021 ஏப்ரல் வரையிலும் வேலைகள் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன், உடன்படிக்கையின் பிரகாரம் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 463,906,674 இலாபமாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 317,423,655 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 146,483,019 தொகையான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு இருப்பு மற்றும் ஐயக் கடன் மிகை ஒதுக்கீடுகள் ரூபா 143,981,831 தொகை கணக்குகளில் சீராக்கப்பட்டமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015 ஆம் ஆண்டின் போது மின்னேரிய பிரதேச அலுவலகத்திற்குரிய ஹல்மில்லேவ 03/006 என்ற தேக்க வேலைத் தளத்தில் ஏற்பட்ட 69 மரங்களின் காணாமல் போனமையின் மோசடி தொடர்பாக நடைபெற்ற சுயாதீன ஒழுக்காற்று பரிசோதனை சபையினால் ஏற்பட்டுள்ள நட்டம் அதற்கு பொறுப்பாக இருந்த தரப்பினரிடம் இருந்து | ஹல்மில்லேவ 006/03 வேலைத் தளத்தில் ஏற்பட்ட மோசடி தொடர்பாக கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்காக கூட்டுத்தாபனம் ஒழுக்காற்று குழுவிற்கு உரிய தினத்தில் அழைத்து இணக்கப்பாடு | குறித்துரைத்த முறையான ஒழுக்காற்று விசாரணை மூலம் வழங்கப்பட்டுள்ள பரிந்துரை அமுல்படுத்தப்பட்ட வேண்டும். |

| | |
|---|---|
| அறவிடுவதற்கு 2018 நவம்பர் 17 ஆம் திகதி பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. இந்த பரிந்துரைக்கு முரணாக கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவரினால் அந்த கட்டளையை அமுல்படுத்துதல் கைவிடப்பட்டமையின் காரணமாக கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 2,994,536 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது. | ஏற்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அறவிடப்பட்ட பணம் குறித்தரீதியில் தீர்மானத்தை எடுப்பதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அந்த குழுவின் அறிக்கை கிடைத்ததன் பின்னர் மிகுதி நடவடிக்கைககள் எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மின்னேரியா களஞ்சியத்திற்கு உரியதாக காணப்பட்ட 170 வழக்குகளில் 32 வழக்குகள் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்கு உரிய மரக் குற்ற வழக்குகளாக இருந்ததுடன், அந்த மரங்களின் பெறுமதி ரூபா 1,667,882 ஆகும். பழைய மரங்கள் கணிசமான அளவில் சேதத்திற்கு உட்பட்டு காணப்பட்டதுடன், இந்த மரங்கள் பௌதீக ரீதியில் காணப்படுகின்றதா என உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | கணக்காய்வு திகதி வரையிலும் களஞ்சியத்தில் 30,000 குற்றிகள் அளவில் காணப்பட்டதுடன், காணப்பட்ட கொவிட் தொற்றுநோய் நிலைமையின் காரணமாக ஊழியர்களின் வருகை வரையறுக்கப்பட்டமையினால் குற்றிகள் பௌதீக ரீதியில் காணப்பட்ட போதிலும், காண்பிப்பதில் வசதியீனம் காணப்பட்டது. அவ்வாறே 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்குரிய மர வழக்குகளில் விடுவிக்கப்படும் வரை விற்பனை செய்வதற்கு உள்ள இயலுமை தொடர்பாக கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | மரக் களஞ்சியத்தின் நிர்வாகத்தை முறைமைப்படுத்துவதற்காக முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | பொலன்னறுவை பிரதேச அலுவலகத்தில் இருப்பு புத்தகம் சமப்படுத்தப்படாதிருந்தமையினாலும், சில மரங்கள் கணிசமான அளவில் இறந்திருந்தமையினாலும், அநேகமான மரக் குற்றிகள் இலக்கங்களுடன் | உக்கிச் சென்ற அல்லது பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத விற்பனைப் பெறுமதியொன்று இன்றிய மரக் குற்றிகளின் கிரயம் கணிப்பீடு செய்யும் போது இறுதி இருப்பில் எடுக்காதிருக்குமாறு எங்களினால் பிரதேச அலுவலகங்களுக்கு ஆலோசனை | மரக் களஞ்சியத்தின் நிர்வாகத்தை முறைமைப்படுத்துவதற்காக முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இனங்காண முடியாதிருந்தமையாலும் பௌதீக இருப்பு மெய்மெய்யாய்வை சரியாக மேற்கொள்ள முடியாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் பொருள் மெய்மெய்யாய்வு அறிக்கைககளில் குறிப்பிடப்பட்ட ரூபா 133,120,313 தொகையான இறுதி இருப்பு பெறுமதி மற்றும் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 1,855,504,806 தொகையான மர இருப்புக்களின் பெறுமதி என்பவற்றின் சரியான தன்மை கணக்காய்வின் போது சர்ச்சைக்குரியதாக இருந்தது. | வழங்கப்பட்டிருந்தது. பிரதேச இருப்பு மெய்மெய்யாய்வு சபையின் மூலம் பௌதீக பரிசோதனை மேற்கொண்டு கையொப்பமிட்டு அவர்களினால் வழங்கப்படுகின்ற இருப்பு மெய்மெய்யாய்வு பத்திரங்களின் அடிப்படையில் கிரயம் கணிப்பீடு செய்யப்படுகின்றது. இதன் போது இருப்பு புத்தகங்களின் மீதிக்கும் பௌதிக மீதிக்கும் இடையே எந்தவொரு பற்றாக்குறையோ அல்லது மிகையோ குறிப்பிடப்பட்டிருக்குமாயின் அது உள்ளக கணக்காய்வின் மூலம் பரீட்சிக்கப்பட்டு உரிய பணம் இருப்புக்கு பொறுப்பான உத்தியோகத்தரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (இ) | கந்துருவெல களஞ்சியத்தில் 2014 முதல் 2018 ஆம் ஆண்டு வரையான குற்றங்களுக்குரிய மரங்கள் ரூபா 421,102 பெறுமதியில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், அது தொடர்பான வழக்கு நடவடிக்கைகளை பரீட்சித்து தேவையான நடவடிக்கைகள் 2021 ஏப்ரல் வரையிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கந்துருவெல களஞ்சியத்தில் காணப்படுகின்ற விடுவிக்கப்படாத வன குற்ற மரங்கள் தொடர்பாக பிரதி பிரதேச முகாமையாளர் மற்றும் உதவி பிரதேச முகாமையாளர்கள் உரிய நிறுவனங்களுடன் தொடர்பினை ஏற்படுத்தி மரங்களை விடுவித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. உரிய வழக்குகளின் தற்போதைய நிலை மற்றும் விடுவித்தல் தொடர்பாக எழுத்து மூலமும் மற்றும் அந்த நிறுவனத்திற்கு சென்று பரீட்சித்தலும் அவர்களினால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றது. எனினும், கடந்த மார்ச் மாதம் முதல் காணப்பட்ட கொவிட் தொற்றுநோய் காரணமாக அந்த நடவடிக்கைகளில் குறிப்பிடக்கூடிய தாமதம் ஏற்பட்டமையை குறிப்பிடுகின்றோம். | முகாமைத்துவத்தினால் வன குற்றங்களுக்குரிய பின்தொடர் நடவடிக்கைகளின் மூலம் அந்த இருப்புக்களை கூட்டுத்தாபன இருப்பு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 விளைவற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மின்னேரிய பிரதேச அலுவலகத்தில் 30 உத்தியோகபூர்வ இல்லங்கள் காணப்பட்டதுடன், அதில் 07 இல்லங்கள் மாத்திரம் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தது. 10 இல்லங்கள் உயிரியல் பல்வகை பூங்கா பணிகளுக்காக பயன்படுத்தப்படுவதுடன், மிகுதி 13 இல்லங்களும் பயனற்று காணப்பட்டது. அதில் இரண்டு உத்தியோகபூர்வ இல்லங்கள் தவிர மிகுதி 11 இல்லங்களும் பயன்படுத்தப்பட முடியாத நிலையில் காணப்பட்டன. | மின்னேரிய பிரதேசத்திற்கு சொந்தமான 30 உத்தியோகபூர்வ இல்லங்கள் காணப்பட்டதுடன் அதில் பிரதேச முகாமையாளரின் உத்தியோகபூர்வ இல்லம் தவிர ஏனைய உத்தியோகபூர்வ இல்லங்கள் 1968 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டவைகள் ஆகும். அதில் 07 இல்லங்கள் மாத்திரம் தற்போது பயன்படுத்தப்படுகின்றது. இந்த உத்தியோகபூர்வ இல்லங்களை மீளமைப்பதற்காக கணிசமான கிரயமொன்றை செலவிடுவதற்கு ஏற்படுவதுடன், மீளமைப்பு செய்யப்படும் வரை அவற்றை பயன்படுத்துவதற்கு முடியுமான கால எல்லையை குறித்துரைத்த பிரகாரம் குறிப்பிட முடியாதிருந்தது. அதனால் புதிதாக நிர்மாணிப்பதற்காக தலைமை அலுவலகத்தின் மூலம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | உத்தியோகபூர்வ இல்லங்களை மீளமைத்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.4 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கேள்வி நிபந்தனைகளின் பிரகாரம் ஒப்பந்தகாரர் பிரதான உற்பத்தி விடயங்களுக்காக சமர்ப்பிக்கின்ற கூறுவிலை மதிப்பீடு செய்யப்பட்ட விலையினைவிட 30 சதவீதத்திற்கு விஞ்சி அதிகரித்து குறைந்து காணப்படுமாயின் வழங்கும் பெறுமதியில் 30 சதவீதம் பிணை தொகையொன்று வைப்புச் செய்யப்பட வேண்டும். எனினும் 04 ஒப்பந்தகாரர்களில் வழங்கல் பெறுமதியான ரூபா 27,200,000 தொகைக்காக வைப்புச் செய்யப்பட | 2020 இன் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் அதிலுள்ள நிதி ஏற்பாடுகளுக்கு இணங்க மரங்களை வழங்கும் நடவடிக்கைகளை நாளது வரையாக்குதல் 2019 ஆம் ஆண்டிலேயே மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதுவரை பொதுவாக மேலதிக பணிகளுக்காக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பிணைப் பணம் நிறுத்தி வைத்தல் இடம் பெற்றிருக்கவில்லை. அதன் பிரகாரம் நீண்ட காலம் கூட்டுத்தாபனத்தில் பதிவுசெய்துள்ள ஒப்பந்தகாரர்கள் மர வழங்கல் மேற்கொள்ளப்படுகின்ற வேலைத் தளங்களில் நன்மதிப்பைப் பெற்ற ஒப்பந்தகாரர்களாக இருந்தமையினால் மரங்களை | கேள்வி நிபந்தனைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| வேண்டும். ரூபா 8,160,000 பிணை வைப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. | வழங்கும் செயற்பாடுகளுக்குரிய பெறுகைத் திட்டம் நாளது வரையாக்கப்படாதிருந்ததுடன், உரிய பணத்தை அறவிடுவதற்கும் முடியாதிருந்தது. |

### 3.5 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இரண்டு வேலைத்தளங்களுக்கு பொறுப்பாக செயற்பட்ட ஒப்பந்தகாரர்கள் வேலையினை பூர்த்தி செய்யாமல் கைவிட்டிருந்ததுடன், அது தொடர்பான உடன்படிக்கை நிபந்தனையின் 21 இன் பிரகாரம் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இதன் காரணமாக மீண்டும் பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கணிசமான பணமொன்று செலவிடுவதற்கு ஏற்பட்டிருந்ததுடன், வீதி அருகில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள மரங்கள் அழிவடைந்து செல்லும் நிலையில் காணப்பட்டது. அதன் காரணமாக கூட்டுத்தாபனத்திற்கு நட்டம் ஏற்பட்டிருந்தது. | இந்த இரண்டு வேலைத் தளங்களினதும் ஒப்பந்தகாரர்கள் விட்டுச் சென்ற சந்தர்ப்பத்தின் பின்னர் மிகுதி மர இருப்புக்கள் ஏனைய ஒப்பந்தகாரர்கள் மூலம் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அது இறுதிக் கட்டத்தில் தற்போது உள்ளது. இந்த மர வழங்கல் முடிவு பெற்றதும் உடனடியாக மிகுதியாக உள்ள மர இருப்பினை வழங்குதலின் தாமதம் தொடர்பாக இலாப நட்ட அறிக்கையொன்று சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | ஒப்பந்த நிர்வாகம் தொடர்பாக முகாமைத்துவத்தால் விஷேட கவனம் செலுத்துதல் வேண்டும். |
| (ஆ) | ஒரு ஒப்பந்தகாரர் குறித்துரைத்த திகதியில் வேலையை பூர்த்தி செய்யாதிருந்த போதும், ரொப்கில் வேலைத் தளத்தில் B, C மற்றும் D என்ற வேலைத் தளங்கள் ஒரு ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டமை வெளிப்படுத்தப்பட்டிருக்கும் போதும் மேலும் ஒரு | ரொப்கில் A வேலைத் தளத்திற்கு பொறுப்பான மர வழங்கல் மேற்கொண்ட ஒப்பந்தகாரருக்கு 2018 ஆம் ஆண்டில் டிக்சன் கோனர் 03/003B ஐதாக்கும் வேலைத் தளம் கையளித்தல் தொடர்பாக பின்வரும் விடயங்களை சமர்ப்பிக்கின்றோம். | ஒப்பந்த நிர்வாகம் தொடர்பாக முகாமைத்துவத்தால் விஷேட கவனம் செலுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்தது. | வேலைத் தளம் கையளித்தல் தொடர்பாக ஒப்பந்தகாரர் அந்த சந்தர்ப்பத்தில் கருப்பு பட்டியலில் இடப்படாமை. A வேலைத்தளத்தில் முன்னால் செயல்முன்னேற்றத்தை மீளாய்வுசெய்யும் போது மிகவும் அதிகரித்து மர வழங்கல் இலக்குகள் அடையப்பட்டிருந்தமை. இந்த நடவடிக்கைகள் தொடர்பாக தொழில்நுட்ப குழுவின் தலைவராக கேள்வி சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த விடயங்களை கவனத்தில் கொண்டு கேள்வி சபை அங்கீகாரம் வழங்கியமை. அதன் பின்னரும் அவர்களுக்கு வேலைத் தளத்தை கையளித்தல் தொடர்பாக கேள்வி சமர்ப்பிப்பதற்கு சட்ட பிரிவில் இருந்து சட்ட ஆலோசனை வழங்குவதற்கு அறிவிக்கப்பட்டதுடன், அதன் போது வேலைத் தளத்திற்காக கேள்வி சமர்ப்பிப்பதற்கு எதிர்ப்பொன்று காணப்படாதிருந்தமை எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருந்தமை. | |
| (இ) | கேள்வி மதிப்பீடொன்றினால் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் கேட்டு விலகியிருந்த ஒப்பந்தகாரர் இருவரினது கேள்வி வைப்புப் பணமான ரூபா 20,000 தொகை விடுவிக்கப்பட்டிருந்ததுடன், கறுப்பு பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இதன் காரணமாக அந்த விலையில் ஒப்பந்தத்தை கையளிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் | இந்த பணிகளுக்குரிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவை 6.3.4 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்காக மர வழங்கல் கேள்வி கோரல் (28) ஆவது நிபந்தனையில் தெளிவுபடுத்தப்படாதிருந்தமையினால் ஒப்பந்தகாரரை நீக்குவதற்கான தேவை எந்த நேரத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும் என குறித்த வகையில் | ஒப்பந்த நிர்வாகம் தொடர்பாக முகாமைத்துவத்தால் விஷேட கவனம் செலுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்படாமையினால் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 2,725,541 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது. | வழங்கப்பட்டிருக்கவில்லை. அதனால் அவர்களுக்கு பொருத்தமானது என கருதுகின்ற சந்தர்ப்பம் ஒன்றில் அதனை அகற்றும் கடிதம் கையளிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சகல காரணங்களையும் கவனத்தில் கொண்டு பிரதி பொது முகாமையாளர் (செயற்பாடுகள்) அதிகாரத்தின் பிரகாரம் அவ்வாறு மேற்கொள்ளாமைக்கு எச்சரிக்கை கடிதம் ஒன்று விநியோகிக்கப்பட்டிருந்தது. இந்த வழுக்களை மாற்றியமைப்பதற்காக 2019 ஆம் ஆண்டு முதல் பெறுகை கேள்வி கோரலின் போது பெறுகை வழிகாட்டிக் கோவையின் 6.3.4 ஆம் பிரிவின் நிபந்தனை உள்ளடக்கப்பட்டுள்ளது. மேலும், நிராகரிக்கப்பட்ட கேள்வி ஆவணங்கள் நன்மதிப்பைப் பெற்ற ஒப்பந்தகாரர்களை தெரிவு செய்யும் போது அடிப்படையாகக் கொள்வதற்கு முடியாதிருந்தது. அதனால் இலாப நட்ட ஒப்பீட்டை மேற்கொள்ள முடியாதிருந்தது. | |
| (ஈ) | ரொப்கில் வேலைத் தளத்தில் 04 பகுதிகளின் கீழ் 2172 மரங்களை அகற்றுவதற்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. முழுமையாக அகற்றுதல் நடவடிக்கைகள் 2018 மே 18 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2018 ஆகஸ்ட் 31 ஆம் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், குறித்த திகதியில் வேலைகள் பூர்த்தி | 2018 ஆம் ஆண்டில் விடுவிக்கப்பட்ட இந்த வேலைத் தளம் அதிக மழை காணப்படுகின்ற சிரிபாத ஒதுக்கப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டிருந்தது. இந்த வேலைத் தளத்தில் காணப்படுகின்ற கஸ்டத்தினால் இதன் முதலாவது ஒப்பந்தகாரர் மர வழங்கலை கைவிட்டிருந்தார். அதன் | ஒப்பந்த நிர்வாகம் தொடர்பாக முகாமைத்துவத்தால் விஷேட கவனம் செலுத்துதல் வேண்டும். |

செய்யப்பட்டிருக்கவில்லை. 2020 ஆம் ஆண்டு வரையிலும் வேலைத் தளத்தின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

பின்னர் அவர் கறுப்பு பட்டியலில் இடப்பட்டிருந்தார். இந்த சந்தர்ப்பம் வரையிலும் சகல குற்றிகளும் வேலைத் தளத்தில் இருந்து அகற்றப்பட்டு வீதி அருகில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த துடன், அந்த மரங்களை அகற்றுவதற்காக தேசிய பத்திரிகைகளில் அறிவித்தல்கள் மூலம் பகிரங்கப்படுத்தப்பட்டு பல சந்தர்ப்பங்களின் போது கேள்விதாரர்களை தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 4 ஆவது சந்தர்ப்பத்தின் போது முன்வந்த ஒப்பந்தகாரரினால் தற்போது 70 சதவீத அளவு மர அறுவடையொன்று அந்த இடத்தில் இருந்து அகற்றப்பட்டதுடன், மர வழங்கல் நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தில் காணப்பட்டது.